உ
சிவமயம்.

T·12788

# திருமருகல் தல வரலாறு.

★

எழுதியவர் :

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான்
அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர்
திரு, ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்

★

திருமருகல் ஸ்ரீ இரத்தினகிரீஸ்வர ஸ்வாமி
தேவஸ்தான வெளியீடு.
1960.

T.12788

# பதிப்புரை.

தெய்வீகம் மிகு திருத்தலங்களை தரிசித்து உயர்வு காண்வரும் ஆத்திகப் பெருமக்களுக்கு, திருமருகல் தலத்தின் பெருமையை உணர்த்த வேண்டி இச்சிறு நூல் வெளியிடப்பட்டுள்ளது. இவ் வெளியீட்டைத் தயாரிப்பதில் எங்களுடன் அன்புகொண்டு ஒத்துழைத்த அனைவர்க்கும் எங்களது நன்றி உரித்தாகுக. தல சம்பந்தமான பாடல்கள் புத்தகத்தின் முடிவில் காணப்படும்.

திருமருகல்,
1960.

ஆலய தர்மகர்த்தாக்களும்,
இறைபணியாளரும்.

உ
சிவமயம்.

# திருமருகல் தல வரலாறு.

## இருப்பிடமும், இயற்கையும்.

சோழ வளநாடு, சோறுடைத்து என்பது மட்டும் அல்லாமல் மக்கள் மனமும், ஆன்மாவும் உய்வதற் கேற்ப கலைகளையும், தலங்களையும் நிரம்ப அமையப் பெற்றதாயும் உள்ளது. புனித காவேரி ஆற்றின் இருமருங்கிலும் எண்ணிறந்த தலங்கள் உள்ளன. தெய்வ வழிபாடும், அருங்கலைகளும். அன்னை காவேரி யினால் எடுத்துச் செல்லப்பட்டு, கரையின் இரு மருங் கிலும் அமைந்திருக்கும் நகரங்கள், கிராமங்கள் இவை களுக்கு ஊட்டப்படுகின்றன. இது தவிர, காவேரி யின் எண்ணிறந்த கிளை நதிகள் இக்கலைகளையும், தெய் வீக சாரத்தையும் தாங்கி சோழநாடு பூராவும் சென்று தழைக்கச்செய்கின்றன. இப்பெருமைக்குறிய தஞ்சா வூர் ஜில்லாவில் முக்கியமானது நன்னிலம் தாலூகா, நிலவளம் மட்டுமன்றி, உளவளமும் பொருந்தியது. இத்தாலுக்காவில் பல தலங்கள் சீரும் சிறப்புடனும் விளங்குகின்றன. இத்தலங்களுள் மிகவும் சிறப்பு கொண்டது இத்திருமருகல் என்னும் தலம்.

மாயவரம்-காரைக்குடி இரயில் பாதையில் இருக் கும் நன்னிலம்தான் இத்தலத்திற்கு மிகவும் அருகி லுள்ள புகைவண்டி நிலையம். நன்னிலம் புகைவண்டி நிலயத்திலிருந்து கிழக்கே ஏழுமைல் தூரத்திலுள்ளது திருமருகல். நன்னிலத்திலிருந்து நாகப்பட்டணம் வரை செல்லும் பஸ்ஸில், நன்னிலம் புகைவண்டி நில யத்தில் ஏறி, திருமருகலில் இறங்கிக் கொள்ளலாம். நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து ஏழு மைலிலும், நாகை ஸ்டேஷனிலிருந்து 15-மைல் தூரத்திலும் இந்த இடம் உள்ளது.

திருமருகல், அழகிய, வளம் பொருந்திய, சிறிய ஊர். விவசாயத் தொழிலே இங்கு பிரதானமான தொழில். தெய்வ பக்தி நிறைந்த உன்னதமாக மக்கள் வசிப்பதற்கு மிகவும் சௌகரியமான இடம். ஊருக்கு மாலையிட்டு அழகு செய்வதுபோல் இவ்வூரின் இரு புறங்களில் தெற்கே புத்தாறும், வடக்கே முடிகொண்டானும் அமைந்திருக்கின்றன. ஏனைய தஞ்சை ஜில்லா கிராமங்களைப்போலவே இங்கும் நெல் சாகுபடியைத்தவிர வாழை, மூங்கில், தென்னை முதலிய மரங்கள் அடர்ந்துவளர்ந்து எழிலை அதிகரிக்கின்றன.

**சுற்றுப்புறத்திலுள்ள தலங்கள் :-** இத்திருமருகல், பாடல்பெற்ற பலதலங்களுக்கு இடையே திகழ்கிறது. நன்னிலத்திலிருந்து இத்தலத்திற்கு வரும் வழியிலே 'திருப்புகலூர்', 'திருக்கண்ணபுரம்' என்ற தலங்கள் இருக்கின்றன. இங்கிருந்து மேற்கே சுமார் ஒருமைல் தூரத்தில் பிரசித்திப்பெற்ற 'திருச்செங்காட்டங்குடி' இருக்கிறது. கிழக்கே ஒரு மைல் தூரத்தில் திருச்சியாத்தமங்கை (திருச்சாத்தமங்கை) இருக்கிறது.

**அமைப்பு :-** தெய்வ தமிழ் மறையினுல் **'நிறை நீர் மருகல்'** என்று குறிப்பிடப்பெற்ற இத்தலத்தில் நீர்வளம் மிகுதி. குளங்களும், குட்டைகளும் அநேகம். மேலவீதிக்கு மேல்புறத்தில் திருமால் கோயில் ஒன்று இருக்கிறது. சிறுஆலயம். திருமாலுக்கு **'ஸ்ரீ வரதராஜப்பெருமான்'** என்பது திருநாமம். இத்தலத்தில் தேரோடும் வீதி நான்கின் மூலைகளிலும் விநாயகர் ஆலயங்கள் இருக்கின்றன. தெற்கு வீதியில் தெற்கு கோபுர வாயிலின் எதிரே **'விடந்தீர்த்த விநாயகர்'** ஆலயம் இருக்கிறது. தல விநாயகர் அவரே. மூர்த்தி மிகவும் சிறப்பு வாய்ந்தது.

இத்தலத்தின் வடக்குத் தெருவிலே ஈசான மூலையிலே இவ்வூரின் பெரும்பான்மை மக்களான செங்குந்த முதலியார்களால் அமைக்கப்பட்ட **'முருகன் ஆலயம்'** சிறப்பாக விளங்குகிறது.

இவ்வூரின் மேற்கு தெருவிலே மிகப் பழமையான சீரணமான சிவாலயம் ஒன்று இருக்கிறது. சிவலிங்கப் பெருமான் திருஉருவம் மட்டுமே அவ்வாலயத்தில் காணப்படுகிறது. இப்பிரானுக்கு **'புழுகீசம் உடையார்'** என்பது திருநாமம்.

திருமஞ்சன வீதியின் கீழ்புறத்திலே (பஸ்ஸிலிருந்து இறங்கி ஆலயத்திற்கு வரும் வழியிலே) நாடார் மகா ஜனங்களின் குலதெய்வமாக **'தருமர் கோயில்'** என்பது விளங்குகிறது. இதுவும் பெரும்பாலும் சீரணமான நிலையிலேயே இருக்கிறது.

கிராமத்தின் ஈசானபாகத்தில் ஊர்காவல் தெய்வமாகிய 'பிடாரி கோவில்' இருக்கிறது. 'அச்சமுடை ஐயனூர்', 'கண்ணடையப்பர்' என்றஇருஐயனூர் ஆலயங்கள் சிறப்புடையன.

**மாணிக்கவண்ணர் ஆலயம் :-** வடமொழியிலே 'இரத்தினகிரீஸ்வரர்' என்றும், தீந்தமிழிலே 'மாணிக்கவண்ணர்' என்றும் அழைக்கப்படும். ஈசனூர் கோயில் சிறிதேயெனினும், மிகவும் அழகு வாய்ந்தது. இது மிகவும் பழமையான திருக்கோயில். கிழக்குப் பார்த்த சந்நிதி. ராஜகோபுரம் அறுபத்தெட்டடி உயரம் உள்ளது. ஐந்து நிலைகளையுடையது. கோயிலின் இதர திருப்பணிகள் புதிதெனினும், இராஜகோபுரம் மாத்திரம் பண்டைய மன்னர்கள் காலத்தியது. தெற்குக் கோபுரம் சிறிதெனினும் மிகவும் அழகானது. மதில்கள் செங்கல் திருப்பணி. மதில் மேல் நந்திகள் விளங்குகின்றன. கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. மடவிளாகத்தையும் வீதிகளையும் சேர்த்தால் நான்கு பிரகாரங்களாகும்.

இராஜகோபுரத்தின் வாயிலிலே தலயாத்திரை வரும் அன்பர்களுக்காக, தல வரலாறு சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. இராஜகோபுரத்தை தாண்டி உட்சென்றதும் கொடிநிலை மண்டபம். அதற்கு அடுத்

தாற்போல் மேற்கே அம்மன் கோயில் மகாமண்டபம். பின்னர் மாணிக்கவண்ணர் எழுந்தருளியுள்ள இடம். இறைவன் இருப்பிடம் ஒரு செயற்கைமலை. சோழன் கோச்செங்கண்ணன் திருப்பணிகளுள் இந்த ஆலயமும் ஒன்று. செங்கண்ணன் சோழநாட்டில் எழுபத்தெட்டு கோயில்களை கட்டினன் என்பது திருநாவுக்கரசர் அருளிச்செய்த அடைவுத் திருத்தாண்டகத்தில் 'பெருக்காறு சடைகணிந்த பெருமான் சேரும் பெருங்கோயில் எழுபதினேடெட்டும்' என்பதாலும் வைகாலூர்த் தேவாரத்தில், 'எண்டோ ளீசர்க்கு எழில் மாடம் எழுபது செய்து கொண்டான்' என்பதாலும் அறியலாம்.

இச்சோழன் முற்பிறவியில் திருவானைக்காவிலுள்ள வெண்ணாவற்கீழ் ஒரு சிலந்தியாய் இருந்தான்; அச்சிலந்தி வெண்ணாவற்கீழ் விளங்கும் சிவபெருமான்மீது வெய்யில் படாது, தழை விழாது தன்னெச்சில் நூலால்வலை பின்னிப் பந்தரிட்டுக் காத்துவந்தது; வெண்ணாவற்பெருமானை ஒரு யானையும் வழிபட்டு வந்தது; அவ் யானை சிலந்திப் பந்தரை எச்சிலென்று எண்ணி அழித்துச் சிவபூஜைசெய்து செல்லும். சிலந்தியும் பொறுமையோடு தன் பணியைத் தவருது செய்யும்; பொறுமையின் எல்லையைக்காண செய்ததுயானை; எல்லையைக் கண்டது சிலந்தி ஒருநாள் அன்பர் இருவருக்கும் அமர் விளைந்தது; சிலந்தி யானையின் துதிக்கையில் நுழைய யானை இறந்தது. சிலந்தியும் செத்தது. சிலந்தியை குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும் இறைவன் மறுபிறவியில் மன்னனுக்குவித்தார்; அவனே, 'சிலந்திச்சோழன்' என்ற சிறப்புத் திருநாமம் பெற்ற செங்கட்சோழன். இந்நிகழ்ச்சியைப் பெரிய புராணமேயன்றி, "புத்தினுர் சிலந்தியும் வாயினூலால் பொதுப்பந்தரது விழைத்துச் சருகால் வேய்ந்த, சித்திரைலரசாண்டு சிறப்பு செய்யச் சிவகணத்துப் புகப்பெய்தார்" என்று மறைவளர் வாயர் அப்பரடிகளும் அருளிச் செய்திருக்கின்றூர்; அச்

சோழனே, முற்பிறவி வாதனை தாக்க யானையேறுப் பெருங்கோயில்களாகக் கட்டினுன்; அக்கோயில்கள் மாடக்கோயில் என்றும், யானையேறுப் பெருங்கோயில் என்றும் வழங்கப்படுவன. இந்தஆலயத்தில் மாணிக்க வண்ணர் சந்நிதிக்கு ஏறும் வாயிற் படிக்கட்டு இறை வன் திருமுன் இல்லை. பக்கத்தில் இருக்கிறது. இதுவே இதனை மலைக்கோயில் என்பதை அறிவிக்கும் சான்று.

மலைக்கோயிலை விட்டு கீழிறங்கியதும் அம்மன் கோயில் மகாமண்டபம். இம்மண்டபத்தின் சுவற்றிலே ஸ்தல புராண வரலாறு சித்திரங்களில் தீட்டப்பட் டிருக்கிறது. மண்டபத்தின் தென்மேற்கு கோடி யிலே, சமீப காலத்தில் திருப்பனந்தாள் மடம் ஸ்ரீ காசி வாசி அருள்நந்தித் தம்பிரான் அவர்களால், ஞான சம்பந்தர் இத்தலத்தில் அருளிச்செய்த விடந்தீர்த்த பதிகங்கள் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டு, பார்வை யான இடத்தில் பதிக்கப்பட்டுள்ளன. மேலும் மண்ட பத்தில் பல இடங்களிலும் தேவாரம், பெரியபுராணம் முதலியவைகளும் எழுதப்பட்டுள்ளன.

இங்கு தலவிருக்ஷம் வாழை. கோயிலின் உட் பிரகாரத்தில் வடக்கு மதில் ஓரமாக தலவிருக்ஷம் இருக்கிறது. வடமொழியில் இத்தலம் 'கதலி வன க்ஷேத்திரம்' என்று கூறப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகளும் "வாழை காய்க்கும் மருகல் நாட்டு மருகலே" என்று கூறியிருப்பது இங்கு சிந்திக்கற் பாலது. இவ்வாழை எவ்வித செய்நேர்த்தியும் இன்றி தானுகவே பயிராகிறது. இதன் பழம் தனித்ததொரு இன்சுவை உடையது. இதனை கோயிலுக்கு வெளி யில் பெயர்த்து நட்டால் பயிராவதில்லை.

கிழக்கு வெளிப்பிரகாரத்தில் வன்னி மரம் ஒன்று இருக்கிறது. அது இத்தல விசேஷத்திற்கு காரண மான செட்டிப் பெண்ணின் திருமணத்திற்கு சிறந்த சான்ருக இருந்தது.

**மூர்த்தி** :- இறைவன் திருநாமம் மாணிக்கவண்ணர் என்பது. சுவாமி சுயம்புமூர்த்தி. சுயம்புமூர்த்தி என்பது உளி பாயாது ஆகிய உரு என்பதாம். மாணிக்கவண்ணரது பாணத்தை நோக்கின் உண்மை புலப்படும். சிவலிங்கத்தின் பீடங்கள் சதுரமானவை அதிலும் சிறப்பாகச் சுவாமி தோட்பக்கத்தில் பாணத்தின் அடிப்பாகத்தில் ஒரு வெட்டு காணப்பெறும். அது குசகேது மகாராஜா என்பவர் இங்குவந்தபோது இத்தலம் காடாக இருந்ததாகவும், காடுவெட்டுவிக்கும் பொழுது மண்வெட்டி திருவுருவிற்றுக்கியதாகவும் இரத்தம் பெருகியதாகவும், அரசனறிந்து சுற்றிலும் வெட்டிப்பார்த்து, இறையுருவைக்கண்டு, ஏங்கித் தெளிந்து ஆலயம் எடுப்பித்தான் என்றும் வரலாறு கேட்கப்பெறுகின்றது. இறைவன் திருநாமம் வடமொழியில் **இரத்தினகிரீஸ்வரர்** என வழங்குகிறது. சிவலிங்கத் திருவுருவில் கவர்ச்சியானவைகளில் இதுவும் ஒன்று. மாணிக்கவண்ணர் சந்நிதியின் வலது புறத்தில் **(சோமஸ்கந்தர்)**, அம்மை, முருகன், விநாயகர் ஐயனுர் முதலிய எழுந்தருளுருவங்கள் காட்சி வழங்குகின்றன. இத்தலத்தில் செட்டிப்பிள்ளை, செட்டிப்பெண் திருவுருவங்களும் இருக்கின்றன. ஆனந்தக்கூத்தர் தெற்குமுகமாக வீற்றிருக்கிருர். ஞானசம்பந்தர் திருவுருவம் 'கூத்தாடும் பிள்ளையாராக' அமைந்திருக்கின்றது. ஆண்டவன் அருளுருவத்தைக் கண்டு காட்டும் கருணை மூர்த்திகளாகிய அறுபத்துமூவர்களின் திருவுருவங்கள் தென்னண்டையுட்பிரகாரத்தில் விளங்குகின்றன. (தென்முகக்கடவுள்) தக்ஷிணு மூர்த்தி மிக அழகிய உருவு ஆகும். முருகன், நவக்கிரகங்கள் சந்நிதிகளும் உரிய இடங்களில் விளங்குகின்றன. மலையைவிட்டுக் கீழேயிறங்கியதும் அம்மை திருக்கோயில். அம்மை தென்முகம் நோக்கி நிற்கின்ருர். அம்மை திருவுருவம் பெரியது; மஹா சௌந்தர்யமானது. அம்மையின் திருப்பெயர் **வண்டுவார் குழலி** என்பது வடமொழியில் ,ஆமோதள நாயகி'

என்று வழங்கி வருகின்றது. தெற்குக் கோபுரத்திற்கு வெளியில் நின்றாலும் காட்சி வழங்கும் நிலையில், அம்மை கருணைகொண்டு நிற்கின்றார்.

சுற்றுக்கோயில் வெளிச்சுற்றிலையில், தெற்குப் பக்கத்திற் சுரந்தீர்த்த விநாயகர் கோயில் இருக்கிறது. அங்கு சோழ மன்னன் ஒருவனுக்கு வெப்பநோய் மிகுந்திருந்ததாகவும், அதனை நீக்கிய காரணத்தால் சுரந்தீர்த்த விநாயகர் என்று பெயர் வழங்கலாயிற்று என்பதும் கர்ண பரம்பரை செய்தி. இப்போதும் சுரநோய் கண்டவர்கள் அவ்விநாயகப்பெருமானுக்கு வேண்டி, நேர்த்திக் கடன் செய்தால் விநாயகப்பெருமான் சுரநோய் தொலைத்துத் தன்பெயரை நிலைநாட்டி வருகிறார் என்பது கண்கூடு. வடக்கு பிரகாரத்தில் சந்தான விநாயகர் இருக்கிறார். சந்நிதி புதிது அதற்கு எதிரில் சிவலிங்கத் திருக்கோயில் மேற்கு பார்த்து அமைந்திருக்கிறது. அது பழைமையானது. என்று சொல்லப்படுகிறது. அதன் பெயர் பிராவிடை· யார் என்றும், அதை ஒட்டி தெற்குப் பார்த்து வீற்றிருக்கும் அம்பாளின் பெயர் சௌந்தரநாயகி என்றும் சொல்கிறார்கள்.

## தீர்த்தங்களும், குளங்களும் அவைகளின் மகிமையும்.

**இலக்குமி தீர்த்தம்** :- இங்குள்ள தீர்த்தங்களில் திருக்கோயிலின் முன்பாக இருக்கும் இலக்குமி தீர்த்தமே மிகச்சிறந்ததாகும். இத்தீர்த்தத்தில், வரலட்சுமி நோன்புநாளில் நியமநிஷ்டையுடன் நோன்பு இருந்து நீராடி, மறுநாளும் நீராடி, மாணிக்கவண்ணரைத் தரிசித்து பாரணை செய்தால் கடன் தொல்லை நீங்கும்· செல்வம் பெருகும் என்ற உறுதிபாடு. இப்போதும் மக்களில் பலரிடையே இருந்து வருகிறது. மேற்குறித்த நாட்களில் பலர் வந்து இலக்குமி தீர்த்தத்தில் நீராடி, மாணிக்கவண்ணரை பாரணை செய்வதை இப்போதும் காணலாம்.

**சீராளன் குளம்** :- தெற்குவீதியிலே, தற்போது ஆலய அலுவலகமாக விளங்கும் மடத்திற்கு பின்புரம்

உள்ளதே இக்குளம். இந்த மடம் முன்பு ஒரு காலத்தில் கல்விச்சாலையாக இருந்தது என்றும், சீர்மிகு சிறுத்தொண்டரின் மகனாகிய சீராளன் இங்கு கல்வி பயில வந்தார் என்றும் சொல்கிறார்கள். சீராளன் பெயராலேயே இந்த மடத்திற்கு பின்புறம் உள்ள குளம் அழைக்கப்படுகிறது. இக்குளத்தில் ஐப்பசி மாதத்திலும், சித்திரை மாதத்திலும் அமாவாசை நாட்களில் விதிப்படி நீராடி மூன்று காலங்களிலாவது மாணிக்கவண்ணரையும், வண்டுவார் குழலியையும் வழிபட்டால் புத்திரப்பேறு சித்திக்கும் என்று சொல்லப்படுகிறது.

இவைகளைத்தவிர, அம்மாகுளம், செட்டிகுளம், குட்டைகுளம், மற்றும் நீர்நிலைகள் பலவும் இருக்கின்றன.

**நூல்களும், ஆராய்ச்சியும்**:- இத்தலம் அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவர் திருவாக்காலும் விளக்கம் பெற்றது. அப்பர், சம்பந்தரால் தனித்த பாசுரங்கள் அருளிச் செய்யப்பெற்றன. சுந்தரர் திருவாக்கும் தோன்றியிருக்கின்றது. சம்பந்தர் பாடலில் மருகல் நீர்வள மிக்கதாக காணப்பட்டுள்ளது. இதனை ' நெற்குன்றம் ஓத்தூர் நிறைநீர்மருகல் நெடுவாயில் ' என்ற திருக்ஷேத்திரக்கோவைத் திருப்பாடல் வலியுறுத்தும். நிறைமொழி மாந்தராகிய தவஞான சம்பந்தர் சிவவாக்குப் பொலிவதை இன்றும் காணலாம். இன்னும் பொதுத்திருத்தாண்டகத்து அப்பரடிகள் ' மருகலுறை மாணிக்கத்தை ' என்று அழைக்கிறார்கள், க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்து ' மருகல் வன்னி நிலமலி நெய்தானத்தோடு எத்தானத்தும் நிலவு பெரும் கோயில் பலகண்டால் கைலாயநாதனைக் காணலா ' மென்கிறார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ' வீழக்காலின் ' என்றோர் பாசுரத்து, ' வாழை காய்க்கும் வளர் மருகல் நாட்டு மருகலே ' என்றதை உற்று நோக்கில், மருகல் ஓர் நாட்டிற்குத் தலைநகராயிருந்த தென்பதும், அதன் கீழ் பல சிற்றூர்கள் செறிந்திருந்

தன என்பதும் அறியப்பெறும். வாழை காய்க்கும் என்ற சொற்றொடர் மூலமாக வாழை தலவிருக்ஷமாக அமைந்திருப்பதை அறிவித்திருக்கின்ற அழகு சிந்தித்தற்குரியது.

ஓர் கன்னியை திருமணம் செய்ய உடன் கொண்டு சென்ற வணிகன் ஒருவன் மாணிக்கவண்ணரை வழிபட்டு ஓர் மடத்தில் இரவு உறங்கினன். மணம் செய்யாததினல் கன்னி அவனைத் தீண்டாது அருகிலே படுத்திருந்தாள். இரவிலே பாம்பு அவ்வணிகனைத் தீண்டியதால் அவன் இறந்தான். கைவிடப்பட்ட கன்னி கதறினள்; புலம்பினள். அப்போதும்கூட கன்னிப்பெண் என்ற எல்லைக்கோட்டை மீறி அவள் அவனை தீண்டினளில்லை. இரவெல்லாம் அழுதாள். பொழுது புலர்ந்தது. 'அடியாரம் இமையவர் தம் கூட்டம் உய்ய அலைகடல் வாய் நஞ்சுண்ட அமுதே! நிலவிட அரவணிந்த நிமலா! மருகல் பெருமானே! காக்கவேண்டு'மென்று கதறினள்.

திருஞான சம்பந்தப்பெருமான், மாணிக்கவண்ணர் வழிபாட்டிற்காக திருமருகலிற்கு எழுந்தருளியிருந்தார். அவல நிலையிலுங்கூட ஆண்டவனின் தோத்திரம் பாடும் கன்னியின் குரலோசை திருஞான சம்பந்தரின் காதுகளில் விழுந்தது. ஞானசம்பந்தரது சிந்தையில் நின்று ஒளிறும்சிவம், சொற்பொருள் வடிவான சிவம், கன்னியின் கவலைச் சொல்லில் ஞான சம்பந்தரையும் கருணைகொள்ளச் செய்தது. வழிபாட்டிற்காக வந்த ஞான வள்ளல் 'உயிர் வள்ளலாக' ஆயினர். அக்கன்னியை நோக்கி 'நீ யார்? உன் வரலாறு என்ன? துன்பம் யாது?' என்று வினவினர். அவள், "என் ஊர் வைப்பூர்; என் தந்தை தாமன்; தந்தை ஏழு பெண்களைப் பெற்றும், பொருள் விருப்பால் சொற்றவறி, முறைதவறி அயலார்க்குப் பெண்டாக்கினன்; யான் கடைசிப்பெண்; என் மாமன் எண்ணம் ஈடேற அவர்களுக்குத் தெரியாமல் இவருடன் வந்தேன்; இவரோ பாம்பு கடித்து மாண்டார்

என்செய்வேன் !" என்றாள். தவக்குழந்தை மனம் சாலக்கனிந்தது. அருள் வெள்ளம் அவலப்பள்ளம் நோக்கி ஓடிற்று. மாணிக்கவண்ணரை நோக்கி விண்ணப்பிக்கின்றார். "இக்கன்னி, சடையாய், விடையாய் மருகலுடையாய்' என்கின்றாள். 'வீரக்கழலணிந்த வேந்தே' என்கின்றாள். 'அரவும் பிறையும் அணிந்த அரனே' என்கிறாள். 'ஆலகாலவிஷத்தின் ஆண்மை ஒடுங்க நீலகண்டம்கொண்ட நெடியோய்' என்கிறாள். 'இவள் அஞ்சி விழவும், அவலப்படவும், அழகு கெடவும் இரவும் பகலும் துன்பப்பட ஆக்கினையே' என்று கன்னிகைக்குள்ள இறைவன் அன்பையும் அவளுடைய இன்னலையும் எடுத்து இயம்பினர். அவர் பாசுரங்களில் 'புலருந்தனையும் துயிலாள் புலரப் போந்து அலரும் படுமோ அடியாள் இவளே' என்றும், 'வழுவாள் பெருமான் கழல் வாழ்க' என அழுவாள்; நினைவாள்; இரவும் பகலுமழுவாள்; 'உடையாய் மருகற் பெருமான் தொழுவாள் இவளைத் துயராக்கினையே' என்றும் வரும் பாசுரங்கள் ஆண்டவன் அருள் உள்ளத்து கருணை வெள்ளத்தைப் பெருக்கியிருக்கவேண்டும். ஏன், "அக்கன்னி தனக்கு உரியோனாகிய செட்டி செத்தும் அவன்மேல் விழுந்து புரண்டு அவனைப் பற்றியே புலம்பவேண்டிய அவள், தேவரீரை நினைத்தே சிந்தை நொந்தாள். அம்மட்டோடன்றிப் 'பாழுந் தெய்வமே' என்றுபதறவேண்டிய அவள் 'பெருமான் கழல் வாழ்க' என்று 'பிராரத்துவ வினையின் பயனை யான் நுகர்ந்தாலும் பெருமான் கழல்கள் வாழ்க' என்று முறை பிறழாது விண்ணப்பிக்கின்றாள். 'இரவும் பகலும் அழுகின்றாள்; தொழுகின்றாள்; இவளைத் துயராக்கினையே' என கன்னியின் கற்புடைமையையும் கடவுள் அன்பையும், கடவுள் துயரொழிக்கவேண்டியதின் அவசியத்தையும் காட்டியிருத்தல் மனக்கனிவிற்கு உரியது. பதிகம் முடிந்தது; பரமன் திருவருளால், உறங்கி விழித்தவன்போல வணிகன் எழுந்தான். உயிர் வள்ளலை வணங்கினன். வள்ளல் மாணிக்கவண்ணர், கிணறு, வன்னி சான்றாக வணிகனையும் கன்னியையும் மணக்கச் செய்தனர்.

ஞானசம்பந்தப் பெருமான் இங்கு எழுந்தருளி யிருக்கும்போது சிறுத்தொண்டர் வந்து திருச்செங் காட்டங்குடிக்கு எழுந்தருளப் பிரார்த்தித்தார். சம் பந்தரும் உடன்பட்டு விடைபெற திருக்கோயிலுக்குச் சென்ருர். மாணிக்கவண்ணர் தமது திருவுருவத்து திருச்செங்காட்டங்குடிப்பெருமான் திருவுருவத்தைக் காட்டி அருளினர். இயற்கை ஒளிமிகுந்த, சார்ந்த பொருளைக்காட்டக்கூடிய மாணிக்கவண்ணர் சம்பந்தர் மனத்துமன்னி நின்ற திருவுருவத்தைக் காட்டியது ஒரு வியப்பன்று. அப்பொழுதுதான் ஞானசம்பந்த ருடைய அருள்வாக்கு, வினவும்-உரையுமாக, 'மருகல் நிலாவி யமைந்தானே' 'கணபதிச்சரம் காமுறவே சொல்லாய்' என்று பிறந்தது. அப்பதிகம் திருமரு கலையும், திருச்செங்காட்டங்குடியையும் சேர்த்துப் பாடியதாகும். அப்பதிகத்தில் மருகல் நாட்டு வளம் பேசப்படுகிறது.

அப்பர் அடிகள் அருளிய பாசுரங்களில் நாலாம் பாசுரம் முதல் ஒன்பதாம் பாசுரம் வரை ஐந்து பாசு ரங்களும் அகப்பொருள் சுவைபட அமைந்துள்ளன. அவற்றுள் 'ஒருதலைவி கிளிக்கு பாலமுதூட்டி பரிந்து வளர்க்கின்ருள். பற்பல சொற்களைக் கற்பிக்கின்ருள். எதற்காக? மருகற்பெருமானுக்கு தூது அனுப்புதற் காக. இம்மட்டோடன்றி கைவளை நழுவ, கண்ணீர் வடிய மாணிக்கவண்ணரை மனதில் எண்ணி உருகு கின்ருள். ஆடை அவிழ, மருகற்பெருமான் வரும் வழி நோக்கி ஓடுகின்ருள். கூடற்சுழி இழைக்கின்ருள். இடப வாகனத்தோடு அந்திக்காலத்து திருவுளங் கனிந்து எழுந்தருள வேண்டுகின்ருள்' என்கிருர். இதில் விளையாட்டிலுங்கூட உயிர்த்தலைவி சிவத் தலைவனையே சிந்தித்தல்வேண்டுமென்பதும்சிந்திக்குந் தோறும் மயிர்க்கூச்செறிய ஆனந்தக் கண்ணீர் பொழிய உள்ளம் உருக தன் வசமற்று சிவப்பித்து ஏறி, சிந்தைதெளிந்து நிற்கவேண்டுமென்பதும் கூறப் பட்டிருத்தல்அன்பர்கள் உள்ளத்து பெருவிருந்தாவன

அருணகிரிநாத அடிகள் பழனியம்பதியின் முருகனை அழைக்கும்போது அவர் தந்தையார் எழுந்தருளியிருக்கும் இடங்களை தொகுத்துக்கூற அவ்விறைவன் தந்த வாழ்வே என்கிருர்கள். 'தமிழ்க்காழி மருதவனம் மறைக்காடு திருமருகல் தனுக்கோடி வருகுழகர் தருவாழ்வே' என்ற பகுதியால் அறியக்கிடக்கின்றது.

**இலக்கியம் :-** இவற்றுள் திருமருகலைப்பற்றிய இலக்கியங்கள் வடமொழியில் தலபுராணம் ஒன்றே. இதுவும் அச்சிடப்பெருதது. தெய்வத்தமிழில் மூவர் பாசுரங்களும் உள்ளன. பெரிய புராணத்து திருஞான சம்பந்தர் புராணத்து பதிெைரு பாடல்கள் காணப்பெறுகின்றன. திருப்புகழில் வைப்புத் தலமாக விளங்குகின்றது என்பது தொகுத்தறியக் கிடக்கின்றது.

**சாஸனம் :-** இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டு ஒன்றே கீழைக்கோபுரத்து 1½ அடி அகலமுள்ள சதுரக்கல்லில் இருக்கிறது. ஆனல் அது மிக பழமையானதாகச் காணவில்லை. அது வருமாறு :

'சகாப்தம் 1617-க்குமேல் செல்லாநின்ற விகுருதி-ஷு தை-மீ 27-உ மஹாராஜா ஸாஹெப் தர்மத்திேைல சுபேதார் தீராவினைத்தீர்த்த முதலியார் சபையில் திருமருகல் அபிஷேகக்கட்டளை அகோரசிவ பண்டாரம் முகாந்திரமாகத் திருமருகல் மாணிக்க வண்ணஸ்வாமி கட்டளைமுன் பூர்வ மோகினிப் பொன் 200 பலபட்டடை சிறவரியாய் தீராவினைத்தீர்த்த முதலியார் அவர்கள் சேர்த்துக் கட்டளையிட்டது பொன் 200 ஆக இந்த பொன் 400-க்கும் ஈடுசெய்ய கைக்குளப் பட்டடைக்கும் புத்திரபவுத்திர பரம்பரைக்கும் சுவாமிக்குப் பகுதி கொடுத்துக்கொண்டு சுத்தத்திலேயே இருக்கவும். இதற்கு யாதொருவர் விவகாரம் பண்ணிைல் கங்கைக்கரைக்குமேல் சேதுவில் பசுவைக்கொன்ற தோஷமடைவர்'. இச்சாஸனத்தால்

தஞ்சாவூர் மஹாராஜா கி. பி. 1882-ஸ் உச்சிக்கால கட்டளைக்கும் பொன் 200 வழங்கி வந்தாரென்று அறியப்பெறும். அகோரசிவ பண்டாரம் என்று அறி விக்கப்பெறுபவர். இலக்கணவிளக்கம் வைத்தியநாத தேசிகருக்கு இலக்கண ஆசிரியனுய் திருவாரூர் அபி ஷேகஅன்னதானக்கட்டளை மூலகர்த்தாவான அகோர சிவ பண்டாரமாக இருக்கக்கூடும் என்பதும் துணியக் கூடும். இது சோமசுந்தர தேசிகர் அவர்கள் எழுதிய 17-ம் நூற்றுண்டுப்புலவர் என்னும் நூலிற் காணப் பெறுகிறது. குலோத்துங்கன் காலத்திய திருப்புக லூர் சாஸனம் ஒன்று சீராளன் பள்ளிக்குச் செல்ல தெருவொதுக்க நிலம் அளந்து விட்டதாகத் தெரிவிக் கிறது.

## புராண வரலாறு.

**தல மகிமை :-** நைமிசாரணிய வனத்தில் ஒரு நாள் செளனகாதிமுனிவர்கள், வியாசமுனிவர் சீடரான சூதமுனிவரைநோக்கி, "முனிவர்களுக்குள் சிறந்தவரே! எங்களுக்கு மன அமைதியை, உண்டுபண்ணும் தலம் ஒன்றன் பெருமையை, சிவபெருமானுடைய கதையை விளக்கிப் புண்ணியங் கொள்ளச் செய்ய வேண்டும்" என்று விண்ணப்பித்தார்கள். சூதமுனிவர், "உலக த்துப் பதினெட்டு தலங்கள் சிறந்தன. அவற்றுள் மூன்று தலங்கள் முன்னணியில் நிற்பன. அவை சிதம்பரம், திருவெண்காடு, திருமருகல் என்பனவாம். இம்மருகல் தலத்தை மருவவேண்டும்" என்று வீட்டை விட்டுப் புறப்பட்டு ஓரடி நடந்தாலே பாவங் கள் மறைகின்றன, பசுபோதம் ஒழிகின்றது. பதி போதமிகுகின்றது. வில்வத்தால் விண்ணவர் பெரு மானை அர்ச்சித்தால் தொடத்தகாதவைகளைத்தொட்ட பாவங்கள் தொலையும்; உண்ணதகாதவைகளையுண்ட பாவம் ஓடும். செய்யத்தகாதன செய்த பாவங்களும் சென்றொழியும்; செல்வம் வளரும்; மரண துன்பம் இல்லை; ஆயுள் பெருகும்; ஆரோக்கியம் வளரும் என்றுரைத்தார்.

**மூர்த்தி மகிமை**: பிரமதேவன் படைப்புத்தொழிலில் தனிப்பெருமை விரும்பினர். அதற்காக அன்ன வாகனத்திலூர்ந்து கலைமகளோடுகூட கைலை அடைந்தார். கைலை கணநாதர்களின் காவலையுடையது. நந்தியெம்பகவான் கீழவாயிலைக் காவல் செய்கிறார் பெருமான் சேவை, பிரயாசைப்பட்டும் கிடைக்கக்கூடியதாயில்லை. கணநாதர், இறைத்திருமுன் அறிவித்து உத்தரவு பெற்று உள்ளேவிட, பிரமன் அடியற்றமரம் போல் வீழ்ந்து வணங்கி "யான் படைப்புச் சிறப்பைப் படைக்க விரும்புகிறேன். தவஞ்செய்ய வேண்டும். தேவரீர் தக்க இடத்தைத் தண்ணருள் செய்ய வேண்டும்; தேவரீரை நினையுறுமாறு நினையவேண்டும்" என்று வேண்டினர். இறைவன் இரத்தினகிரி என்னும் பெயர் வாய்ந்த திருமருகற் சிறப்பைச் செப்புகின்றார்.

"முன்னொரு காலத்தில் குசகேது என்னும் அரசன் ஆண்டான். என் அன்பர்களில் சிறந்தவன். குடி நலம் பேணும் கொள்கையுடையவன். அவன் ஆட்சி காலத்து ஒருக்கால் மழையே இல்லாமற் போயிற்று. அரசனே மழையை விரும்பி தக்க அந்தணர்களைக்கொண்டு யாகங்கள் செய்வித்தான்; அன்னதானஞ் செய்தான்; சொர்ணதானஞ் செய்தான்; என்ன செய்தும் மழை இல்லை; எனக்கும் பூசனைகள் புரிந்தான்; வேத பாராயணம் செய்வித்தான்; அடியவர்களை வழிபட்டான்; சோமவாரம், பிரதோஷம், சிவராத்திரி முதலிய விரதங்கள் எல்லாவற்றையும் மேற்கொண்டான். இவ்வாறு ஒன்பது ஆண்டுகள் ஒழிந்தன. பின்னர், நாடு தழைக்க பஞ்சாக்கினி நடுவில் கடுதவம் புரிந்தான். குடிகள் பணம் அற்றுப்போனமையால், பஞ்சக்கொடுமையால், கற்புடைய மனைவியர் இருந்தும் காவியுடுத்தனர்; தாய்மார் மகவுக்கும் மறைத்துக் கஞ்சிஉண்ணத் தொடங்கினர்; மாணவர்கள் ஆசிரியர் ஆணையைக் கடந்தனர்; மனைவியர் மணவாளர் சொல்லைக் கடந்தனர்; இறந்தனர் பலர். இவைகளையெல்லாம் செங்கோல் அரசன்

சிந்தை பொறுக்குமா! அரசனாக இருந்தும் இவர்களுக்கு உதவிபுரிய இயலவில்லை. 'அரசனாகிய நான் இக்கொடுமைகளையும் காண்பேனா? நானோ அரசன்? நானே பாவி' என்று கழுத்திற் சுருக்கிட்டுக்கொண்டு இறக்கத் துணிந்தான். இவன் உறுதியை இறக்க மனத்தையுணர்ந்த யான், இம்முக்தி மண்டபத்தினின்றும் சிவகணங்கள் புடைசூழ மங்கள வாத்தியங்கள் முழங்கப் புறப்பட்டேன். நான் திருமருகலுக்கு எழுந்தருளிய காலம் வைகாசி-மீ விசாக நக்ஷத்திரம் கூடிய செவ்வாய் நாளாகும். அப்போது காவிரிக்கரையில் நூறு யோசனை தூரமும் திருமருகலில் பத்து யோசனை சுற்றளவும் மாணிக்கம், நெல், முத்து, நீர் ஆகிய மழை பொழிந்தது. அரசன் மகிழ்ந்தான்; குடிகள் அனைவரும் மகிழ்ந்தனர். அரசன் மகிழ்ச்சி அளவற்ற தோத்திரப் பாடல்களாகத் தோன்றின. எனது செவி குளிர்ந்தது. 'என்ன வரம் வேண்டு' மென்று வினவினேன். அரசன், 'தேவரீர் திருவடிப்பேற்றைத் தவிர ஒன்றும் வேண்டாம். ஆயினும், 'சூரியசந்திரர்களுள்ளவரை இத்தலத்தில் எழுந்தருளி கைலாயக் காட்சி வழங்கவேண்டும். இரத்தின மழை பெய்ததால் **இரத்தினபுரம்** என்று இத்தலம் அழைக்கப்பெற வேண்டும். இத்தலத்தில் வசிப்பவர் பொன்னும் மெய்ப்பொருளும் பொருந்த வேண்டும்' என்று வேண்டினான். நானும் அவ்வாறே அருள் புரிந்து அங்கு கருணைக்காட்சியனாய் **மாணிக்கவண்ணர்** என்ற பெயரோடு இனிது வதிகின்றேன். எனக்கு அவ்வரசன் தெய்வ தச்சனைக்கொண்டு திருப்பணி பல செய்வித்தான்; வைகாசி விசாகத்து விழாக் கொண்டாடினான்; குடிகள், அந்தணர்கள், அகத்தொண்டர், புறத்தொண்டர் வாழ வீடுகள் கட்டிவைத்தான்; மற்ற பாத, வார, பட்ச தின விழாக்கள் வகுத்தான். மனைவியோடு அங்கேயே தங்கி, ஆறுயிரம் ஆண்டு அரசு செய்து, **சோழன்** என்ற மகனைப் பெற்று மன்னனாக்கி, எனது மலரடி மன்னி நிற்கின்றான். நீயும் அங்கு சென்று அருந்தவம் புரியின் எண்ணம் ஈடே

றும் '' என்றார். அவ்வாறே பிரமன் சென்று இலக்குமி தீர்த்தத்தில் நீராடி மாணிக்க வண்ணரை வழிபட்டு வந்தான். இறைவன் இவன் தவத்திற்கிரங்கிச் சித்திரை-மீ சித்திரை நாளிற் காட்சி வழங்கினர். கண்ட பிரமன், தன் வசமற்று பதிபோதங் கைவரப் பெற்ற போது, படைப்புத்தொழில் சிறந்தது. மகிழ்ந்த மலரோன், மாணிக்கவண்ணருக்கு விழாக்கொண்டாட எண்ணி (அனுக்ஞை) அனுமதிப்பெற்று, நீராடி விபூதி கண்மணி பூண்டு, மந்திரமோதி சங்கற்பித்து உறுதிகொண்டு ஒன்பதுநாள் விழாகொண்டாடினன். பத்தாம் நாள் மாசிமகம் அன்று (தீர்த்தவிழா) நீர் விழா கொண்டாடினன். அந்தணர்களுக்கு அன்னம் அளித்தான்.

இவ்வாறே 'பராசரர்' என்னும் ஒரு முனிவர் இருந்தார். அவர் பெரிய யோகி; புலன்களைவென்ற புண்ணியர்; ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கியவர்; விருப்பு வெறுப்பு அற்றவர்; பெருமையும் இழிவும் பேணபெற்றியர்; சிவதத்துவமறிந்த செம்மனத்தர். தீர்த்தங்கள் ஆடவேண்டுமென்ற அவா அவர் மனதைக் கொள்ளை கொள்ள கங்கையாடப் புறப்பட்டார். வழியில் யமுனைக் குறுக்கிட்டது தாண்டவேண்டும்; யமுனைக்கரையை அடைந்த நேரம் நடுப்பகல்; ஓடம் விடுவார் உணவருந்தச் சென்றிருந்தனர். ஓடக்காவலாக ஒரு பெண்ணிருந்தாள். அவள் செந்திருவனைய மேனியள் மகளிரும்மோகிக்கக்கூடிய அழகினள். அவள் அழகு புலனை வென்ற முனிவர் புத்தியையும் மயக்கிற்று. ஆதலால் பராசரர் கன்னியை அணுகி "எங்களைப்போன்ற யாத்திரிகர்களுக்கு உதவினல் இப்பிறப்பிலேயே எல்லா நன்மையும் எய்துவாய், அனாதைகளையும், பெண்களையும், விதவைகளையும், குழந்தைகளையும் முனிவர்களையும் ஆற்றில் காப்பாற்றினவர்கள் மும்மூர்த்திகளாலும் காப்பாற்றப்பெறுவர்'' என்றார். இவற்றையெல்லாம் செவிமடுத்த அக்கன்னி 'யானோ சிறுமி தோணியை இயக்குவது எங்ஙனம்?" என்றாள். பராசரர் கோடி தீர்த்தங்களோடுகூடிய கமண்டலத்தை

நடுவில் வைக்கிறேன், நானும் ஒரு மூலையில் ஏறிக் கொள்கிறேன்,'' என்று ஓடத்திலுட்கார்ந்தார். தோணி வேகமாக ஓடிற்று "நாளே கிழவன் தோணியை மெதுவாக இயக்கு,'' என்றார் பராசரர் பின் தன் தவ வன்மையால் யாற்றினிடையில் அழகிய சிங்காரவன த்தை யுண்டாக்கினர். அவள் மேலுள்ள மீனாற்ற த்தைப்போக்கினர். பரிமளகாந்தியாகச் செய்தார். அவளைப்பார்த்து தன்னைமணந்துக்கொள்ள வேண்டி னர். அவள் 'யான் ஒரு இழிகுலத்தாள் என்னை அந்தண குலத்தின் அருந்தவராகிய தாம் விரும்புவது அழகன்றே! அன்றியும் தாய் தந்தையர்க்கு உட்பட்ட வள், என்னை தாம் மறந்துவிட வேண்டும்,'' என்றாள். பராசரர், "அப்படியல்ல யான் சிவ ஆணையாலேயே உன்னை விரும்புகின்றேன், உலக நன்மைக்காகவே உன்னை விரும்புகின்றேன். நீயோ வயதடைந்தவள். வயது அடையும்வரை தாய் தந்தையர்க்கு அடங்க வேண்டியதுதான். இப்போது நீயே கணவனை வரித் துக்கொள்ளலாம். ஆதலால் என் வேண்டுகோளை நிறைவேற்று'' என்றார். அவளும் இசைய, வியாசர் அவ தரித்தனர். வியாசர் தாயிடம் ஆணைப்பெற்றுத் தவம் செய்யப்பதரிகாச்சிரமம்சென்றார். பராசரர் மனஅமைதி பெறுதவராய் தீர்த்தமாடச்சென்றார். கவலை குடிபுக்கது இக்கவலை 'இழிகுலப்பெண்ணை, இயைந்ததால்' என அறிகிறார், 'கழிந்ததற்கு இரங்கி என்ன' தேறுதல டைகிறார். ஒன்றும் நிறைந்தபாடில்லை, கவல்கின்ற மனதைக் கடைத்தேற்ற ஒரு அசரீரி உண்டாயிற்று அது, "சிவஆணையால் நீ மணந்தாய் உன்மேற் குற்ற மில்லை மனத்தூய்மை யடையவேண்டின் 'இரத்தின சலம்' என்று ஒரு நகரிருக்கிறது. அங்கு சந்திர புஷ்கரணி என்ற ஒரு தீர்த்தம் உண்டு. அது சந்தி ரன் தேயக்கூடிய நோயைப்போக்கியது. அதில் மூழ்கி கதலிவனத்தைச்சுற்றி மாணிக்கவண்ணரை வழிபடுக' என்பதாகும். அவ்வாறே அவர் நீராடி வன்னியிலை யால்சிவலிங்கத்தையும் காளியையும் வழிபட்டுவந்தார். சித்திரைமீ சித்திரைப் பௌர்ணமியில் நண்பகலில்

மாணிக்கவண்ணர் சிவலிங்கத் திருவுருவிலிருந்து வெளிப்போந்து அருள்வழங்கினர். மகிழ்ந்த பராசரர், பரமேசனைப்பார்த்து "தேவரீர் பரிவாரங்களோடு இவ் விடத்தில் எப்போதும் எழுந்தருளவேண்டும். அடி யேனுக் கருள் தந்தாற்போல், அறிவுடை யான்மாக்க ளுக்கும் அறிவிலாப் பொருள்களுக்கும் அருள் வழங் கல் வேண்டும் அன்பு நிறைந்த மனத்தோடு பெரு விழா இயற்றுபவர்களுக்கும் வில்வத்தால் அர்ச்சிப்ப வர்களுக்கும், தேவரீர் எளிதில் வந்து கையகப்படல் வேண்டும்"என்றுவேண்டிக்கொண்டார். இறைவனும் "அவ்வாறே ஆகுக" என்று இன்னருள் சுரந்தார், பின்னர் பராசரர் தேவதச்சனைக்கொண்டு ஆகமவிதிப் படிச் சிவாணையாலே திருக்கோயில் மண்டபம் உபகர ணங்கள் எல்லாம் அமைத்தார். சித்திரைமீ சுக்ல பக்ஷம் ஷஷ்டி நாளில் கொடியேற்றி எல்லா சிறப்புக்க ளோடும் பெருவிழாவை நடத்தி பௌர்ணமி நாள் நீர் விழாச் செய்வித்தார். பின்னர் இறையாணைப்பெற்று பதரிகாவனஞ்சென்று, மீண்டும் வந்து சிவத்தொ ண்டை இடையருது, இயற்றி சிவத்தோடு இரண்டறக் கலந்தார்.

## தீர்த்த மகிமை, இலக்குமி தீர்த்தம் :

ஒருகாலத்து, கங்கைக்கரையில் முனிவர் ஒருங்கு சேர்ந்தனர். ஓர் யாகம் செய்ய விரும்பி, 'யாருக்கு முதற்பூசை செய்வது' என்ற ஆலோசனை பிறந்தது. அவர்களிற் சிலர் பிரமனை வழிபடுபவர்கள்; சிலர் விஷ்ணுவை வணங்குபவர்கள்; சிலர் சிவவழிபாடுடைய வர்கள். அவர்களுள். '**யார் முழு முதற் கடவுள்**' என்ற வழக்குண்டாயிற்று. இதனை 'இங்கேயே தீர்த்து முடிவுகாண வேண்டும்' என முயன்றனர். பிரமனைப் பேணுபவர்கள், "படைத்தற் கடவுள்; வேதக்கடவுள்; அவரே பெரியவர்" என்றனர். "செல்வம் பெருகுந் திருமகள் கணவர்; திருமாலே பெரியவர்" என்று சிலர் வாதாடினர். சிலர் "அறிவுக்கு அறிவாயும், ஒன்று யும், தத்துவங்களைக் கடந்து நிற்குந் தனிக்கருணைப்

பரம்பொருளே உலகையழித்தலின், அதுவே முதல்; அதுவே சிவம்" என்று பேசினர். இவ்வாறு வாதமூள சௌனகர் சிரித்து, "ஒன்று செய்வோம், பிரமன் மகனாகிய பிருகு முனிவரையனுப்பி அறிந்துவரச்செய்வோம்" என்றனர். முனிவர்கள்விரும்பியபடி, பிருகு முனிவர் சென்று பிரமனைக்கண்டார். பிரமன், தன் கூட்டத்தாரோடு பாடலிற் களித்து கலைமகள் மகிழத் தானும் மகிழ்ந்திருந்தார். பிருகு வருகையைக் கவனியாதிருந்தார். சிறிது நின்று பார்த்துவிட்டு, "இவர் மதத்தால் என்னோடு பேசவில்லை" என்று எண்ணிச் சிவலோகம் சென்றார். அங்கு முக்தி மண்டபத்தில் பெருமான் பெருமாட்டியோடு, சிவகண நாதர்கள் திருத்தொண்டு செய்ய, எழுந்தருளியிருந்தார். இரண்டு முகூர்த்தநேரம் நின்றார் பிருகுமுனிவர்; கோபம் வந்தது; "மனையாளோடுகூடி மகிழ்கின்ற உம்மை 'தேவேசன்' என்பது வீண்" என்று உரக்க கத்தினர். ஓடினர் வைகுண்டத்திற்கு அங்கு திருமால் திருமகளோடும், நித்திய சூரியர்களோடும் விஷ்வக்சேநர் முதலிய சேனைத்தலைவர்களோடும் திகழவீற்றிருந்தார். தன் வரவைக்காணவில்லை. கோபத்தால், பள்ளிகொண்டிருக்கிறபெருமான் திருமார்பில் உதைத்தார். உடனே பெருமாள், அருக்கியம், கால்கழுவ நீர், குடி நீர் முதலியன கொடுத்து உபசரித்தார். "முனிவரே, நான் துக்கமற்றவன்; ஒன்றாலும் வேறுபடுத்தப்படாதவன்; என்னை உதைத்தீர். அதனால் உம் கால் நோவுமே!" என்று கால்களைப்பிடித்துவிட்டார். பிருகு முனிவர் விஷ்ணுவின் சாந்தத்தைக் கண்டு, 'பெருமாளே பெருமான்' என்ற முடிவை முனிவர்களுக்குக் கொண்டுவந்து கொடுத்தார். இது நிற்க, திருமார்பில் இருந்த திருமகள், உதைத்த பிருகுவுக்குப் பெருமாள் செய்த பணிகளைக்கண்டு சினந்தவளாய் "அன்புடைத் தலைவரே, உதைத்தவனை இவ்வாறு உபசரித்தீர்! இது நியாமற்ற காரியம் என்மனம் புண்படுகிறது. இதோ பாரும்; நான் மிகத் தொலைதூரம் போகப்போகிறேன். கடுந்தவம் செய்யப்

போகிறேன்; நானிருக்குமிடத்தில் உம்மை வலிய வரச்செய்வேன்," என்று சொல்லிக்கொண்டே தண்ட காரண்யத்தை நோக்கிப் புறப்பட்டாள். பல தலங்களையும் கண்டாள்; அங்ஙனம் கண்டு வருகின்ற இலக்குமி, காவிரிக்குத் தென்கரையோரமாக எழுந் தருளுகின்றாள். ஆவணி-மீ பௌர்ணமி, வெள்ளிக் கிழமை மாலை காலம் மாணிக்கவண்ணர்கோயில் மலர் மகள் கண்ணிற்பட்டது. பேரொளிதிருமகளைப்பிணித் தது. வியப்படைந்து விண்ணின்று இறங்கி இறை எழுந்தருளியிருப்பதைக் கண்டாள். "இங்கு தவம் செய்து என் எண்ணப்படி திருமாலை இங்கு அழைப் பேன்" என்று உறுதிக்கொண்டு மாணிக்கவண்ணர் திருக்கோயிலின் கீழ்பக்கத்து ஒரு குளம் வெட்டி அதில் மூழ்கித் தவம் செய்து வந்தாள். தவஞ்செய்ய ஒரு வன்னி மரத்தையும் வைத்தாள், மாணிக்கவண் ணரை வில்வங்களால் அர்ச்சித்து வழிபட்டாள். ஒவ்வொரு மாதக்கடைசியில் வரும் வெள்ளிக்கிழமை யிலும் திங்கட்கிழமை அமாவாசையிலும் மௌன விர தம் பூண்டு அஷ்டோத்திரம் முதலியன செய்து வழி பட்டு, வேண்டியபடியே விஷ்ணு எழுந்தருளப்பெற் ருள்; பரவசமதைந்தாள். "என்னுயிர்த் தலைவ! இது ஒரு சித்திதரும் தலம். இங்கே சிலநாள் தங்கி முழு முதற்கடவுளை வணங்குவோம்" என்று விண்ணப்பித் துக்கொண்டாள்; விஷ்ணுவும் இசைய விழாமுதற் பல பூசைகளையும் ஆற்றி இருந்து வைகுண்டமடைந்தனர். இத்தீர்த்தத்தைத் தொட்டாலும், மூழ்கினாலும், குடித் தாலும் பாவங்கள் கழிகின்றன. பரஞானியாகிருன்; இத்தீர்த்தம் அரியனவற்றுள் மிக அரிது.

ஒரு காலத்து, வசிட்டருடைய புத்திரி பிள்ளைப் பேற்றை விரும்பி, வெய்யிலில் நின்றும் மழையில் நின்றும் கடுந்தவம் புரிந்தனள். ஆயிரம் ஆண்டுகள் சென்றன. இறைவன் ஒருநாள் கிழவேதியனுய் எழுந் தருளி ஒரு பழத்தை அவளுக்குக் கொடுத்துத் தின்னு மாறு உத்திரவிட்டார். அவள் எண்ணம் ஈடேருமை யால் கோபித்து அதனை எறிந்து வந்தாள். இறைவன்

மீண்டும் பழம் தந்தார், அவளும் அங்ஙனமே எறிந்து வந்தாள்; இப்படி இருபத்தொரு தடவை நடந்தது. இருபத்திரண்டாந்தடவையும் கொடுத்தார், அவள் எறியப்போகுந்தருவாயில், இறைவன் மறைந்தனர். "இது என்ன" என்று வியப்புடன் நின்ருள். அப்போது ஆகாயவாணி, "உனக்கு இருபத்திரண்டு மக்கள் பிறப்பார்கள்; ஆனல் உடனே இறப்பார்கள்; இருபத்திரண்டாவது பிள்ளை நற்குணமும் நல்லறிவும் படைத்தவனயிருப்பான். அவனும் இறப்பான்" என்றது. அவளும்அப்பழத்தை உண்டாள்; ஆகாயவாணி சொன்ன அனைத்தும் முறையே நடந்தன. இறந்து போன இருபத்திரண்டாம் மகனை எடுத்துக்கொண்டு 'பிள்ளை பறிகொடுத்த பாவியானேனே' என்று புலம்பினள். அப்போது நாரதர் அறிவித்தபடி, இவனை எடுத்துக்கொண்டு 'ரத்னகிரி' யென்னும் திருமருகலையடைந்து இலக்குமிதீர்த்தத்து மூழ்குவித்துத் தானும் மூழ்கி எழுந்தாள். பிள்ளை உறங்கி விழித்ததுபோல எழுந்தான்; இன்பக்கடலுள் மூழ்கினள்; உயிர்கொடுத்த இறைவனை வணங்கினள்.

**திருவிழாக்கள் :-** இங்கு பெருவிழா சித்திரை மாதத்தில் நடைபெறுகிறது; சுக்கில பக்ஷத்து ஷஷ்டியில் கொடியேறுகிறது; பத்து நாள் விழா நடைபெறும். திருவிழாவின் ஏழாம் நாளன்று 'செட்டிப்பெண் கல்யாணம்' என்ற விழா, அன்று 'வசந்தன்' மாலை செட்டிப்பிள்ளைக்கும் செட்டிப்பெண்ணுக்கும் திருமணம்நடைபெறும். மணக்கோலத்தோடு பல்லக்கில் வீதிவலம் நடைபெறும்; ஐந்தாம்திருவிழா விலிருந்து ஏழாம் திருவிழாவரை திரளான மக்கள் கூடுகிருர்கள். தரிசித்து பயன் பெறுகிருர்கள்.

ஆவணி மாதத்தில் வரலெக்ஷ்மி நோன்பன்று கமலவாகனத்தில் இலக்குமியும் வரதராஜபெருமாளும் எழுந்தருளி இலக்குமி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருள்வர்; இவ்விழாவும்இங்குசிறப்பாக கொண்டாடப் படுகின்றது.

**தல மகிமை :-**

பெருகெலாந்தவம் பேதமை தீரலாந்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே.

அப்பர் சுவாமிகளின் இந்த பாடல் ஒன்றே இத்தலத்தின் பெருமையை விளக்க போதியதாகும்.

இத்தல எல்லையில் பாம்பு முதலியன தீண்டுவதால் யாரும் இறப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. 'சுரந்தீர்த்த விநாயகருக்கு நேர்த்திக்கடன் செய்தால் சுரநோய் நீங்கும். இலக்குமி தீர்த்தத்தில் வரலக்ஷ்மி நோன்பு நாளில் மூழ்கி நோன்பு இருந்து மறுநாளும் மூழ்கி மாணிக்கவண்ணரைத் தரிசித்துப் பாரணை செய்தால் கடன் தொல்லை நீங்கும்; செல்வம் பெருகும்' என்ற உறுதி இப்போது மக்களிடை இருக்கிறது. அன்று பலர் வந்து வழிபாடாற்றுவதைக் காணலாம். 'சீராளன் தீர்த்தத்திற் நீராடினுற் புத்திரப்பேறுண்டாகும். சந்திர புஷ்கரணியில் நீராடினுல் அபமிருத்து தோஷங்கள் நீங்கும்' என்று புராணங்கள் புகலுகின்றன.

**திருப்பணிகள்:-** சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தேவக்கோட்டை ராம. மெ. சி. த. இராமனுதஞ் செட்டியார் அவர்கள் இத்திருக்கோயிலை பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து புதுப்பித்தார்கள்.

திருக்கோயிலின் எதிரிலுள்ள இலக்குமி தீர்த்தம் அதன் மேற்கரையில் ஒரு விநாயகர் கோயில், நீராழி மண்டபம் இவற்றை தேவக்கோட்டை குப. கரு. கரு. குடும்பத்தார் சீரிய முறையில் புதுப்பித்தார்கள்.

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

## விடந்தீர்த்த பதிகம் - திருமருகல்

### பண் இந்தளம்.

**திருச்சிற்றம்பலம்**

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா வெழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுன் மெலிவே (1)

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ விவளே சறவே. (2)

அறையார் கழலும் அழல்வா யரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகன் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண்டெழில் வவ்வினையே. (3)

ஒலிநீர் சடையிர் கரந்தா யுலகம்
பலி நீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகன் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக்கவும் வேண்டினையே (4)

துணிநீல வண்ணம் முகிற்றோன் றியன்ன
மணி நீலகண்ட முடையாய் மருகற்
கணி நீலவண்டார் குழலா ளிவடன்
அணிநீல வொண்கண் அயர்வாக் கினையே. (5)

பல்ரும் பரவப் படுவாய் சடைமேன்
மலரும் பிறை யோன் றுடையாய்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ வடியா ளிவளே. (6)

வழுவாள் பெருமான் கழல் வாழ்கவெனு
வெழுவா ணினைவா ளிரவும் பகலு
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
றொழுவா ளிவளைத் துயராக் கினையே. (7)

இலங்கைக் கிறைவன் விலங்க லெடுப்பச்
சலங்கல் விரலூன் றலுந்தோன் றலனுய்
வலங்கொண் மதில்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் இவளை யலராக் கினையே. (8)

எரியார் சடையும் மடியும் மிருவர்
தெரியாத தோர் தீத்திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியா ளிவளை அயர்வாக் கினையே. (9)

அறிவில் சமணு மலர்சாக் கியருந்
நெறியல் லனசெய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமான்
யெறியார் குழலி நிறை நீக்கினையே. (10)

வயஞானம் வல்லார் மருகற் பெருமான்
உயர் ஞானமுணர்ந் தடியுள் குதலால்
இயன் ஞான ஞானசம்பந்தன பாடல் வல்லார்
வியன் ஞாலமெல்லாம் விளங்கும் புகழே. (11)

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு சுவாமிகள்

## திருமருகல் பண்—திருகுறுந் தொகை.

### திருச்சிற்றம்பலம்.

பெருகலாந்தவம் பேதமை தீரலாந்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே (1)

பாடங்கொள் பனுவற்றிறங் கற்றுப்போய்
நாடங்குள்ளன தட்டிய நாணிலீர்
மாடஞ்சூழ் மருகற் பெருமான்திரு
வேடங்கை தொழ வீடெளிதாகுமே (2)

சினத்தினல் வருசெய் தொழிலாமவை
யனைத்துநீங்க நின்ருதர வாய்மிக
மனத்தினன் மருகற் பெருமான்றிறம்
நினைப்பினர்கில்லை நீணில வாழ்க்கையே (3)

ஒதுபைங்கொளிக் கொண்பாலமு தூட்டிப்
பாதுகாத்துப் பலபல கற்பித்து
மாதுதான் மருகற் பெருமானுக்குத்
தூதுசொல்லி விடத்தான் தொடங்குமே (4)

இன்னவா றென்பதுண் டறியேனுன்று
துன்னுகைவளை சோரக் கணீர்மல்கும்
மன்னுதேன் மருகற் பெருமான்றிறம்
உன்னியொண் கொடியுள்ள முருகுமே (5)

சங்குஞ்சோரக் கலையுஞ் சரியவே
மங்கைதான் மருகற் பெருமான்வரும்
அங்கவீதி யருகணை யாநிற்கும்
நங்கைமீரிதற் கென்செய்கே னுளுமே (6)

காட்சிபெற் றிலளாகிலுங் காதலே
மீட்சியோன் றறியாது மிகுவதே
மாட்சியாற் மருகற் பெருமானுக்குத்
தாழ்ச்சி சாலவுண்டாகு மென்றையலே (7)

நீடுநெஞ்சு ணினைந்து கண்ணீர்மல்கும்
ஓடுமாலினே டொண்கோடி மாதராள்
மாடநீண் மருகற் பெருமான்வரிற்
கூடுநீ யென்று கூடலிழைக்குமே (8)

கந்தவார்குழல் கட்டிலள் காரிகை
அந்திமால் விடையோடு மன்பாய்மிக
வந்திடாய் மருகற் பெருமானேன்று
சிந்தைசெய்து திகைத்திடுங் காண்மினே (9)

ஆதிமா மலையன் றெடுத்தானிற்றுச்
சோதியென்றலும் தோல்லருள் செய்திடும்
ஆதியான் மருகற் பெருமான்றிறம்
ஓதிவாழ்பவர் உம்பர்க்கு மும்பரே. (10)

திருச்சிற்றம்பலம்.

# திருமருகல் பெரிய புராணம்.

திருமருகல் நகரின்கண் எழுந்தருளித் திங்களுடன் செங்கட் பாம்பு
மருவுநெடுஞ் சடைமவுலி மாணிக்கவண்ணர் கழல் வணங்கிப்போற்றி
உருகிய அன்புறுகாதல் உன்னலேப்பத் தெள்ளுமிசை யுடனேகூடப்
பெருகுதமிழ் தொடைசாத்தி அங்கிருந்தார் பெரும்புகலி பிள்ளையார்தாம். (1)

அந்நாளில் ஒருவணிகன் பதிகனுகி அணைவானோர் கன்னியையும் உடனேகொண்டு
பொன்னூர் மேருச்சிலையார் கோயில்மாடு புறத்திலோரு மடத்திரவு துயிலும்போது
மின்னார்வேள் எயிற்றரவு கவ்வுதலும் கிளர்ந்தவிட வேகங்கடிது தலைமீக்கொண்டேறத்
தன்னுவி நீங்குமவன் தன்மைக்கண்டு சாயலிளங் கன்னிநிலை தளர்ந்துசோர்வாள். (2)

வாளரவு தீண்டவுந்தான் தீண்டகில்லாள் மறுமாற்றம் மற்ரேருவர் கோடுப்பாரின்றி
ஆளரியேறனையானை அணுகவீழ்ந்தே அசைந்தமலர் கோடிபோல்வாள் அகற்றும்போது
கோளுரும் புள்ளரசும் அனையார்எல்லாக் கோள்கையினு லுந்தீர்க்கக்குறையாதாக
நீளிரவு புலர்காலை மாலைவாச நேறிகுழலாள் நேடிதயர்ந்து புலம்புகின்ருள். (3)

அன்னையையும் அத்தனையும் பிரிந்துநின்னை அடைவாக உடன்போந்தேன் அரவால்வாடி
என்னைஉயிர் விட்டகன்றாய் யானேன்செய்கேன் இவ்விடுக்கண் தீர்க்கின்றார் யாருமில்லை
மன்னியசீர் வணிகர்குல மணியேயானும் வாழேன்என் றேன்றயாவாள் மதியினாலே
சேன்னியிளம் பிறைஅணிவார் கோயில்வாயில் திசைநோக்கித் தொழுதழுதாள் சேயலோன்
[றில்லாள். (4)

அடியாராம் இமையவர்தங் கூட்டமுய்ய அலைகடல்வாய் நஞ்சுண்ட அமுதேசெங்கண்
நெடியானும் நான்முகனும் காணக்கோல விடஅரவணிந்த நிமலாவேந்து
பொடியான காமனுயிர் இரதிவேண்டப் புரிந்தளித்த புண்ணியனே பொங்கர்வாசகக்
கடியாரும் மலர்சோலை மருங்குசூழுங் கவின்மருகற்பெருமானே காவாய்யென்றும். (5)

வந்தடைந்த சிறுமறையோன் உயிற்மேற்சீறி வருங்காலன் பெருங்கால வலயம்போலும்
சேந்தறுகன் வெள்ளேயிற்றுக் கரியகோலம் சிதைந்துருள உதைத்தருளுஞ்சேய்யதாளாய்
இந்தவிடக் கோடுவேகம் நீங்குமாறும் யான்இடுக்கண் குழிநின்றும் ஏறுமாறும்
அந்திமதிக் குழவிவளர் சேய்யவேணி அணிமருகற் பெருமானே அருளாய் என்றும். (6)

இத்தன்மை சிவனருளே சிந்தித்தேங்கும் இளங்கோடி போல்நுடங்கும் இடைஏழைஏத்தும்
அத்தன்மை ஓசையெழுந் தேங்கள்சண்பை ஆண்டகையார் கும்பிடவந் தனேகின்றார்தம்

மெய்த்தன்மை விளங்குந்திருச் செவியிற்சார மேவதலுந் திருவுள்ளக் கருணைமேன்மேல்
வைத்தன்னம் எனஅயர்வள் மாடுநீடு மாதவத்தோர் சூழஎழுந் தருளிவந்தார். [7]

சிரபுரத்து மறையவனுர் சென்றுநின்று சிவபெருமான் அருள்போற்றிச் சிந்தைநைந்து
பரிவுறுவாள் தனைநோக்கிப் பயப்படேல்நீ பருவாலும் நும்பரிசும் பகர்வாய்என்னக்
கரமலர்கள் உச்சியின்மேல் குவித்துக்கொண்டு கண்ணருவி சொரிந்திழியக் காழிவேதப்
புரவலனுர் சேவடிக்கீழ் வீழ்ந்து தாங்கள் போந்ததுவும் புகுந்ததுவும் புகலலுற்ருள். [8]

வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் தாமன்எந்தை மருமகன் மற்றிவனவற்கு மகளிர்நல்ல
இளம்பிடியார் ஓரெழுவர் இவரில்முத்தாள் இவனுக்கென் றுரைசெய்தே ஏதிலானுக்
குளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்தபின்னும் ஓரோருவராக எனைஒழியஈந்தான்
தளர்ந்தழியும் இவனுக்காத் தகவுசெய்தங் கவரைமறைத் திவன்தனையே சார்ந்துபோந்
[தேன். [9]


மற்றிவனும் வாளரவு தீண்டமாண்டான் மறிகடலிற் கலங்கவிழ்ந்தார் போலநின்றேன்
சுற்றத்தார் எனவந்து தோன்றிஎன்பால் துயரமெல்லாம் நீங்கஅருள் செய்தீர்என்னக்
கற்றவர்கள் தொழுதேத்துங் காழிவேந்தர் கருணையினுற் காரிகையாள் தனக்குநல்கப்
பற்றியவாள் அரவுவிடந் தீருமாறு பணைமருகற் பெருமானைப் பாடலுற்ருர். [10]

சடையானை யெவ்வுயிர்க்குந் தாயானனைச் சங்கரனைச் சசிகண்ட மவுலியானை
விடையானை வேதியனை வெண்ணீற்றனை விரவாதார் புரம்மூன்றும் எரியச்செற்ற
படையானைப் பங்கயத்து மேவினானும் பாம்பணையில் துயின்றானும் பரவுங்கோலம்
உடையானை உடையானே தகுமேஇந்த ஒள்ளிழையாள் உன்மேலி வென்றெடுத்துப்
பாட. [11]

பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றான்சூழ்ந்த பொருவில்திருந் தொண்டர்குழாம் பொலிய
[ஆர்ப்ப
அங்கயினை உச்சியின்மேல் குவித்துக்கொண்டங் கருட்காழி பிள்ளையார் அடியில்வீழ்ந்த
நங்கைஅவள் தனைநயந்த நம்பியோடு நானிலத்தில் இன்புற்று வாழும்வண்ணம்
மங்குதவழ் சோலைமலி புகலிவேந்தர் மணம்புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார் [12]

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | | திருத்தம் |
|---|---|---|---|---|
| 20 | 21 | பரவமதைிந்தாள் | — | பரவசமடைந்தாள் |
| 23 | 1வது பாடல் 4வது வரி | லிவளுன் | — | லிவளுண் |
| ,, | 5வது பாடல் 2வது வரி | மருகற் | — | மருகல் |
| 24 | 6வது பாடல் 2வது வரி | றுடையாய் | — | றுடையாய் மருகல் |
| ,, | 8வது பாடல் 2வது வரி | சலங்கல் | — | துலங்கல் |
| ,, | 10வது பாடல் முதல் வரி | சாக்கியருந் | — | சாக்கியரும் |
| 25 | 5வது பாடல் முதல் வரி | டறியேனுன்று | — | டறியேனின்று |
| ,, | 5வது பாடல் 2வது வரி | கணிர்மல்கும் | — | கண்ணீர்மல்கும் |
| 26 | 7வது பாடல் 3வது வரி | மாட்சியாற் | — | மாட்சியார் |
| 28 | 6வது பாடல் முதல் வரி | உயிற்மேற்சீறி | — | உயிர்மேற்சீறி |



ஆலயமும், இலக்குமி தீர்த்தமும்.